ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 4.8 – மாதவத்தோன்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 4.8 – மாதவத்தோன்

‡ மா தவத்தோன் புத்திரன் போய் ⋆ மறி கடல்வாய் மாண்டானை ⋆
ஓதுவித்த தக்கணையா ⋆ உருவுருவே கொடுத்தான் ஊர் ⋆
தோதவத்தித் தூய் மறையோர் ⋆ துறை படியத் துளும்பி எங்கும் ⋆
போதில் வைத்த தேன் சொரியும் ⋆ புனல் அரங்கம் என்பதுவே ॥ **4.8.1** ॥

பிறப்பகத்தே மாண்டொழிந்த ⋆ பிள்ளைகளை நால்வரையும் ⋆
இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து ⋆ ஒருப்படுத்த உறைப்பன் ஊர் ⋆
மறைப் பெருந் தீ வளர்த்திருப்பார் ⋆ வருவிருந்தை அளித்திருப்பார் ⋆
சிறப்புடைய மறையவர் வாழ் ⋆ திருவரங்கம் என்பதுவே ॥ **4.8.2** ॥

மருமகன் தன் சந்ததியை ⋆ உயிர் மீட்டு மைத்துனன்மார் ⋆
உருமகத்தே வீழாமே ⋆ குருமுகமாய்க் காத்தான் ஊர் ⋆
திருமுகமாய்ச் செங்கமலம் ⋆ திருநிறமாய்க் கருங்குவளை ⋆
பொரு முகமாய் நின்றலரும் ⋆ புனல் அரங்கம் என்பதுவே ॥ **4.8.3** ॥

கூன் தொழுத்தை சிதகுரைப்பக் ⋆ கொடியவள் வாய்க் கடியசொல் கேட்டு ⋆
ஈன்றெடுத்த தாயரையும் ⋆ இராச்சியமும் ஆங்கொழிய ⋆
கான் தொடுத்த நெறி போகிக் ⋆ கண்டகரைக் களைந்தான் ஊர் ⋆
தேன் தொடுத்த மலர்ச் சோலைத் ⋆ திருவரங்கம் என்பதுவே ॥ **4.8.4** ॥

பெருவரங்கள் அவை பற்றிப் ⋆ பிழக்குடைய இராவணனை ⋆
உருவரங்கப் பொருதழித்து ⋆ இவ்வுலகினைக் கண் பெறுத்தான் ஊர் ⋆

குரவரும்பக் கோங்கலரக் ⋆ குயில் கூவும் குளிர் பொழில் சூழ் ⋆
திருவரங்கம் என்பதுவே ⋆ என் திருமால் சேர்விடமே ॥ **4.8.5** ॥

கீழ் உலகில் அசுரர்களைக் ⋆ கிழங்கிருந்து கிளராமே ⋆
ஆழி விடுத்தவருடைய ⋆ கருவழித்த அழிப்பன் ஊர் ⋆
தாழை மடல் ஊடுரிஞ்சித் ⋆ தவள வண்ணப் பொடி அணிந்து ⋆
யாழின் இசை வண்டினங்கள் ⋆ ஆளம் வைக்கும் அரங்கமே ॥ **4.8.6** ॥

கொழுப்புடைய செழுங்குருதி ⋆ கொழித்திழிந்து குமிழ்த்தெறிய ⋆
பிழக்குடைய அசுரர்களைப் ⋆ பிணம் படுத்த பெருமான் ஊர் ⋆
தழுப்பரிய சந்தனங்கள் ⋆ தடவரை வாய் ஈர்த்துக் கொண்டு ⋆
தெழிப் புடைய காவிரி வந்து ⋆ அடி தொழும் சீர் அரங்கமே ॥ **4.8.7** ॥

வல் எயிற்றுக் கேழலுமாய் ⋆ வாள் எயிற்றுச் சீயமுமாய் ⋆
எல்லை இல்லாத் தரணியையும் ⋆ அவுணனையும் இடந்தான் ஊர் ⋆
எல்லியம் போதிருஞ்சிறை வண்டு ⋆ எம் பெருமான் குணம் பாடி ⋆
மல்லிகை வெண் சங்கூதும் ⋆ மதிள் அரங்கம் என்பதுவே ॥ **4.8.8** ॥

குன்றாடு கொழு முகில் போல் ⋆ குவளைகள் போல் குரை கடல் போல் ⋆
நின்றாடு கணமயில் போல் ⋆ நிறம் உடைய நெடுமால் ஊர் ⋆
குன்றூடு பொழில் நுழைந்து ⋆ கொடி இடையார் முலை அணவி ⋆
மன்றூடு தென்றல் உலாம் ⋆ மதிள் அரங்கம் என்பதுவே ॥ **4.8.9** ॥

‡ பரு வரங்கள் அவை பற்றிப் ⋆ படையாலித்தெழுந்தானை ⋆
செருவரங்கப் பொருதழித்த ⋆ திருவாளன் திருப்பதி மேல் ⋆
திருவரங்கத் தமிழ் மாலை ⋆ விட்டுசித்தன் விரித்தன கொண்டு ⋆
இருவர் அங்கம் எரித்தானை ⋆ ஏத்த வல்லார் அடியோமே ॥ **4.8.10** ॥

அடிவரவு — மாதவத்தோன் பிறப்பு மருமகன் கூன் பெரு கீழ் கொழுப்பு வல்லெயிற்று குன்று பரு மரவடி

**மாதவத்தோன் முற்றிற்று**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்